
# ஆத்ம ஜோதி

⁂



அமரநாத் ஆலயம்

(ஓர் ஆத்மீக
மாத வெளியீடு)

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

- சுத்தானந்தர்

ஜோதி 18 | விசுவாவசு ஸ்ரீ கார்த்திகைமீ 1உ [16-11-65] | சுடர் 1

## பொருளடக்கம்


| | |
|---|---|
| சிவனுக்கு வணக்கம் | 1 |
| பிரம்மதேவர் உபதேசம் | 2 |
| அமரநாத் | 3 |
| அமரநாத் யாத்திரை | 5 |
| நல்லை நகர் நாவலர் | 9 |
| வழிகாட்டும் தெய்வம் எங்கே? | 15 |
| வழிகாட்டும் சுடரே நீ வருக! | 16 |
| கந்தையா வைத்தியநாதன் | 17 |
| சைவத்திற் சிவம் | 19 |
| அருள் நெறி காட்டிய தாய் | 21 |
| ஜீவ காருண்யம் | 25 |
| நேயத்தே நின்ற நிமலன் | 28 |
| மனம் | 31 |



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூபா 100 .00 — வருட சந்தா ரூபா 3.00
தனிப்பிரதி சதம் 30.

கௌரவ ஆசிரியர் — திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் — திரு. நா. முத்தையா

"ஆத்மஜோதி நிலையம்", நாவலப்பிட்டி. [சிலோன்]
தொலைபேசி எண்:—353


# சிவனுக்கு வணக்கம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

— மணிவாசகர்.

சிந்திப்பார் மனத் தான்சிவன் செஞ்சுடர்
அந்தி வானிறத் தானணி யார்மதி
முந்திச் சூடிய முக்கண்ணி னானடி
வந்திப் பாரவர் வானுல காள்வரே.

— அப்பர்.

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே.

—திருமூலர்.

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை யேத்துது நாமடியோம்.
செருவி லரக்கனைச் சீரி லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்

— சம்பந்தர்.

மற்றுநான் பெற்றது ஆர்பெற வல்லார்
வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும்
கொள்கையால் மிகைபல செய்தேன்
செற்று மீதோடுந் திரிபுரம் எரித்த
திருமுல்லை வாயிலாய் அடியேன்
பற்றிலேன் உற்ற படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.

— சுந்தரர்.

## பிரம்மதேவர் நாரத மகரிஷிக்குச் செய்த உபதேசம்

(சங்கரர்)

மகாவிஷ்ணுவும் சிவனைப் பூஜித்து அதன் மகிமையால் தான் மூன்று உலகங்களையும் இரட்சிக்கும் சக்தியை அடைந்தார். லோக பிதாவான நானும் சிவப்பிரசாதத்தினால் தான் சதுர்தச லோகங்களையும் சிருஷ்டிக்கும் ஒரு சக்தி விசேடத்தை அடைந்தேன், என்னுடைய புத்திரர்களும் இன்னும் இருந்து வருகிற எல்லா வேறு பரம ரிஷிகளும் சிவபூஜையைத்தான் செய்து வருகிறார்கள்.

நாரதா! நீயோ என்றால் விசேடமாகச் சிவபூஜை செய்து வருகின்றாய்! மேலும் வசிட்டர் முதலான சப்த ரிஷிகளும் சிவபூஜை செய்து வருகின்றார்கள். வசிட்டருடைய தர்மபத்தினியான அருந்ததியும் அகஸ்திய முனிவருடைய தர்மபத்தினியான லோபாமுத்ராதேவியும் கௌதம மகரிஷியினுடைய தர்மபத்தினியான அகல்யாதேவியும் சிவ பூஜை செய்து வருகிறார்கள். துர்வாச மகரிஷி, கௌசிகர், சக்தி, ததீசி மகரிஷி, கௌதமர், கணாதர், பரசுராமர், ஜீவர், வைசம்பாயனர், இந்த முனிவர்கள் எல்லாம் சிவ பூஜை செய்து கொண்டு அதைச் சித்தாந்தமாக உடையவர்களாயிருக்கிறார்கள்.

மகாபக்தரான உபமன்யுவும், மஹாசைவரும் ஞானியுமான யாஞ்யவல்க்ய மகரிஷியும், சுகப்பிரம்ம ரிஷியும், பரமபக்தர்களான சௌனகாதி மகரிஷிகளும், இன்னும் அனேக முனிவர்களும் சதாசிவஸ்வரூபத்தில் லயித்து சிவ பூஜை செய்து வருகிறார்கள்.

இந்திராதிகளான லோகபாலர்களும், அஷ்டவசுக்களும், முப்பத்துமுக்கோடி தேவர்களும், சாக்யர்களும், கந்தர்வர்களும், கின்னரர்களும், உபதேவர்களும் சிவபூஜை செய்து வருகிறார்கள்.



## அமரநாத்

-(ஆசிரியர்)-

அம்பர்நாத் என்பதன் சிதைவே அமரநாத் என்பதாகும். அதாவது வானத்தின் தலைவன் என்பது பொருள். காஷ்மீர் என்றால் யாரும் அறிவர். சமுக்காளம், பட்டு என்பவை மூலம் அறிந்திருந்தோம். ஜவகர்லால்நேரு மூலமாகவும் காஷ்மீரை நினைவு கூர்ந்தோம். இந்திய பாகிஸ்தான் சண்டைமூலம் பாலர் முதல் பாட்டி ஈறாக யாவரும் அறிந்துள்ளனர். ஆத்மீகத்தில் உயர்வடைந்த பெரு மக்கள் யாவரும் அமரநாத்தைத் தரிசிப்பதற்காகவே காஷ்மீர் சென்று வந்தனர். தமது உள்ளத்தைக் கவர்ந்த தலங்களுள் மிகச் சிறந்தது அமரநாத் என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

பம்பாய் இராச்சியத்தில் தானா மாவட்டம் என்பது ஒரு பிரதேசம். கல்யாணதாலுக்கா சிறந்த இடம். பம்பாயிலிருந்து முப்பத்தெட்டாவது மைல் தூரத்தில் உள்ளது அமரநாத். சிவன் கோயில் பண்டைச் சிறப்புடையது. மேற்குப்பார்த்த வாயிலுடையது. இங்குள்ள சிற்பச்சிறப்புக்கு இணையாக பம்பாய் இராச்சியத்தில் எங்குமே காணமுடியாது.

அமரநாத் திருவுருவத்தை தரிசிக்கச் செல்பவர்கள் உடையின்றியே செல்வது வழக்கமாகும். சுவாமி விவேகானந்தர் குகையினுள்ளே சென்றபோது தான் கோவண உடையோடுதான் சென்றதாகக் குறிப்பிடுகின்றார். உடல் முழுவதும் விபூதி அணிந்திருந்தபடியினால் குளிரோ, அனலோ தோற்றவில்லையென்றும் வெளியே வந்த பின்னர் உடல் குளிரினால் விறைத்துப்போய் விட்டதென்றும் குறிப்பிடுகின்றார். அத்தகைய குளிரிலே வெண்மை நிறமுடைய புறாக்கள் மாத்திரமே வாழ்கின்றனவாம். வேறு எவ்விதப் பிராணிகளும் வாழ்வதில்லை. குகையை விட்டு வெளியே வரும்போது வெண்மை நிறப் புறாக்களைத் தரிசித்தால் சிவ தரிசனம் கிடைத்ததற்குச் சரியென ஒரு ஐதீகம் உண்டு. அதனால் அஷ்ட சித்திகள் உண்டாகுமாம்.

காஷ்மீர் இயற்கை அழகு மிகுந்த இடம். இயற்கை அன்னை தனது லாவண்யத்தை காஷ்மீரில் மிகப் பெரிதாக பதித்துள்ளாள். சுவாமி விவேகானந்தருடைய உள்ளத்தில்

உள்ள பல சந்தேகங்கள் அந்த யாத்திரையின் பின்பே நீங்கியதாகக் குறிப்பிடுகின்றார். பல இஷ்ட சித்திகளும் தாமாக வந்து அடைந்தனவாம்.

சுவாமிகள் ஸ்ரீ நகருக்கு திரும்பி வரும் போது யாத்திரிகர்கள் வழக்கமாக வருகிற வழியாலேதான் வந்தார். அங்கு க்ஷீர்பவானி தேவியைத் தரிசித்தார். ஏழு நாள் தேவியை இடைவிடாது வழிபாடு செய்தார். ஒரு நாள் தேவியை வழிபாடு செய்யும்போது சுவாமிகள் உள்ளத்திலே ஓர் எண்ணம் தோன்றியது. அன்னையினுடைய ஆலயத்தை அந்நியர் அழிவு செய்த பொழுது நான் இருந்திருந்தால் சும்மா விட்டிருப்பேனா? அதனைத் தடுப்பதற்கு அங்கிருந்தவர்கள் ஒரு முயற்சியும் செய்யவில்லையே என்று ஏங்கினார்.

அப்பொழுது அன்னையினுடைய வாக்காக சுவாமிகளுடைய செவியிலே இவ்வண்ணம் பட்டது. ''என் விருப்பத்தின்படியே அந்நியர் இவ்வாலயத்தை அழித்தார்கள். பாழாகிய கோயிலிலே வாழவேண்டுமென்பது எனது விருப்பம். அல்லாவிடின் தங்கத்தினாலே ஏழடுக்கு மாளிகையாய் விளங்குகிற ஆலயம் ஒன்றினை அமைத்துக் கொள்ளுதல் எனக்கு இயலாததொன்றா? உன்னால் என்ன முடியும்? நான் உன்னைக் காப்பாற்றுகின்றேனா? நீ என்னைக் காப்பாற்றுகின்றாயா?''

அந்தத் தெய்வச் சொல் பட்ட நாள் முதல் மடாலயங்கள் அமைக்கவேண்டும், திட்டமிட்டுக் கருமமாற்ற வேண்டுமென்பதையே சுவாமிகள் தாம் விட்டுவிட்டதாகக் கூறுகின்றார்கள்.

இவ்வண்ணமே அமரநாத் சென்றவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித அனுபவம் ஏற்படுவதைக் காண்கின்றோம்.

---

கடவுள் மனிதனைச் சிருஷ்டித்தார் என்பதுதான் உண்மை. மனிதன் கடவுளைச் சிருஷ்டித்தான் என்பதெல்லாம் வெறும் பிரமையாகும். ஆயினும் கடவுள் கர்த்தாவுமில்லை. காரணமும் இல்லை என்று வேண்டுமானால் கூறிக் கொள்ளலாம். இந்த இரண்டில் எதைச் சொன்னாலும் அவருக்கு ஏற்கும்.

-காந்தி



# அமரநாத் யாத்திரை

-: சுவாமி ஸ்ரீ ஓங்காரானந்த சரஸ்வதி :-

உலகில் நாம் காணும் எல்லாத் தோற்றங்களையும் விட மலைகளின் தோற்றம் பெரிதாக இருக்கிறது. அப்படியான பெரிய மலைகளின் உச்சியில்தான் இறைவனின் காட்சியும் சிறப்புற்று விளங்குவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இலங்கையில் உள்ள மிக உயர்ந்த மலைகளுள் ஒன்றான சிவனொளிபாத மலையின் உச்சியில்தான் சிவனது பாதங்கள் பூசிக்கப்பட்டு வருகின்றன. கதிர்காமத்திலுள்ள கதிரமலையின் உச்சியில்தான் முருகன் சிறப்பாகக் காட்சி அளிக்கின்றார். அதேபோன்று தென் இந்தியாவிலும் பழனி திருக்கழுக் குன்றம், திருப்பரங் குன்றம், திருத்தணிகை, திருப்பதி போன்ற புகழ் பெற்ற சேத்திரங்கள் மலையின் உச்சியில்தான் அமைந்துள்ளன. மலைகளிலெல்லாம் உயரமான இமய மலையைக் காணும் வாய்ப்புப் பெற்றவர்கள் இறைவனது மகிமையையும், திருக்காட்சியையும் கண்டு களிக்கும் பேறு பெறுகின்றனர். இந்தியாவின் வளத்துக்கும், இந்தியாவின் ஆத்மீகச் செல்வத்துக்கும் இமயமலை மூலஸ்தானமாக இருந்து வருகிறது. சிவபெருமானின் சடாபாரத்தில் வீற்றிருப்பதாக நாம் வழிபடும் புகழ் பெற்ற கங்காதேவியும் அந்த இமயமலையின் உச்சியிலிருந்துதான் ஊற்றெடுத்து ஞான கங்கையாக ஞானாமிர்தத்தை ஊட்டி உயர்ந்த ஞானிகளையும், ரிஷிகளையும், தோற்றுவிக்கின்றாள். இதனால்தான் இந்தியா ஞானபூமி என்று உலகுள்ள காலம் வரை புகழப்பட்டு வருகிறது. அவர்கள் மூலமாகத்தான் இந்தியா உயர்ந்த ஆத்மீகச் செல்வத்தை வளர்த்து வருகின்றது. இமயமலைத் தோற்றமே உள்ளத்தில் ஆத்மீக உணர்வை ஊட்டுகிறது. இயற்கையாக முளைத்து ஓங்கி நிற்கும் மரங்களும், அழகிய பூஞ்செடிகளும், பனிக்கட்டிகளினால் மூடப்பட்டுள்ள மலைகளின் காட்சியும் நீண்ட சடைகளைக் கொண்ட மிருகங்களும், அழகிய தோற்றத்தை உடைய மனிதரும் இங்கு கண்களுக்கு விருந்தளிக்கின்றன. இப்படியான இயற்கைக் காட்சியைக் காணுந்தோறும் கடவுளின் மகிமையைக் கண்ணாகிய பொறியினூடாகக் கண்டு களிப்பவராகின்றோம். பனிக்கடவுள் நீராக உருகிப் பெருக்கெடுத்தோடும் நதிகளின் ஓசையும் சுயேச்சையாகவும், களிப்போடும் வாழ்ந்து

வரும் பறவைகளின் குரல்களும் செவிக்கு இறையுணர்வை ஊட்டுகின்றன. காற்றில் மிதந்து வரும் மலர்களின் வாசனையை மூக்கினால் முகரும்போது மனமானது தானாகவே உயர்ந்த நிலைக்கு செல்கிறது. மேனியில் படும் மெல்லிய குளிர்ந்த காற்று உள்ளத்தில் புத்துணர்ச்சியையும், புது வலிமையையும் உண்டாக்குகிறது. இமயமலைச்சாரலில் கிடைக்கும் கனிகள் நாவிற்கு நல்ல சுவையாக இருப்பதோடு சத்வ குணத்தையும் ஏற்படுத்துகின்றன. அதுமட்டுமல்ல; அம்மலைகளில் முளைத்துள்ள செடிகள் உடலில் தோன்றும் நோய்களையெல்லாம் மாற்றி விடுகின்றது. இங்ஙனம் ஐம்பொறிகளினூடாக உள்ளத்துக்கு தெய்வ சம்பத்தும் உடலுக்கு ஆரோக்கியமும் திடகாத்திரமும் ஏற்படுகின்றது.

இப்படியான இமய மலையின் சாரலில்தான் அதே கங்காநதியின் கரையில்தான் சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களும் தவம் செய்தார்கள். அங்குதான் சிவானந்த ஆச்சிரமும் அமைத்தார்கள். தெய்வ நெறிக் கழகத்தை ஸ்தாபித்தார்கள். அங்கு சுவாமிகளது இரண்டாவது புண்ணிய திதி ஆராதனையில் கலந்து கொள்வதற்காக ஓடோடியும் சென்றேன். ஆராதனையில் கலந்து கொண்டிருக்கும் அமரநாதனின் தரிசனத்திற்குச் செல்பவர்கள் ஆகஸ்ட் மாதம் 9-ம் திகதிக்கு முன்பு பஹல்காம் என்ற இடத்திற்கு சேர்ந்து விடவேண்டுமென்றும் 12-ம் தேதி அமரநாதன் தரிசனம் என்றும் இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்தி காதுக் கெட்டியது. முன்போர் முறை இமாலயம் சென்றிருந்தபோது பத்திரிநாத் கேதார்நாத் என்ற இரு சேத்திரங்களும் யாத்திரை சென்றபோது ஏற்பட்ட அனுபவம் உடனே ஞாபகத்திற்கு வந்தது. ஆகவே, இம்முறை இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அமரநாத் யாத்திரை செல்லவேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. ஸ்ரீ சிதானந்த சுவாமிகளிடமும் அங்கிருந்த ஏனைய அடியார்களிடமும் விடைபெற்றுக்கொண்டு ஒருசில தினங்களுள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டேன். சுமார் ஒரு நாள் புகையிரத பிரயாணத்தின்பின்பு பத்தாங்கோட் என்ற ஊரைச் சென்றடைந்தேன். இதுதான் இந்தியாவின் வடக்கிலுள்ள கடைசிப் புகையிரத நிலையம். அங்கும் சில ஆலயங்களிருக்கின்றன. இந்தியாவிலுள்ள நங்கல் என்ற ஓர் பெரிய அணைக்கட்டின் மூலம் நாடு விருத்தி செய்யப்படுவது, அங்கு ஒரு இடத்தில் மொடலாக அமைக்கப்பட்டு கல்லூரி மாணவர்களதும்,



எஞ்சினியர்களதும் அறிவு வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்குமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு நாள் அங்கு தங்கி அவைகளையும் பார்த்துவிட்டு மோட்டார் வண்டிமூலம் யம்மு என்ற இடத்தைச் சென்றடைந்தேன். அங்கிருந்து ஸ்ரீ நகர் செல்வதற்கான பாதை மழை காரணமாக மூடப்பட்டுள்ளது என்பதை அறிந்தேன். பாதை மீண்டும் திறக்கப்படும்வரை அங்கேயே தங்கவேண்டிய அவசியமேற்பட்டது. அதுவும் இறைவனின் கருணை போலும். அங்கு பல பாகங்களிலும் மாபிள் கல்லினால் அமைக்கப்பட்ட பெரிய சிறந்த இந்து சமய ஆலயங்கள் இருக்கின்றன. அதிகமான ஆலயங்களில் சிவலிங்கம் வழிபாட்டுக்குரிய மூர்த்தியாக அமைந்துள்ளது. அங்கு ஆலயத்திற்கு செல்பவர்கள் கையில் ஒரு செம்பும் புஷ்பங்களும் கொண்டு செல்வார்கள். செம்பில் நீர் எடுத்து அங்கு ஆலயத்திலுள்ள சிவலிங்கத்தின்மேல் ஊற்றி அபிஷேகம் செய்துவிட்டு புஷ்பத்தினால் தாங்களே அர்ச்சனை செய்வார்கள். இங்கு வாழ்பவர்கள் அநேகர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். இந்நகரம் கஷ்மீரத்திலுள்ள சிறந்த இரு நகரங்களுள் ஒன்றாகும். புராணிமந்திர் என்ற இராமர் ஆலயத்தில்தான் தங்கி நின்றேன். அந்த ஆலயத்தில் இருந்தவர்கள் எவருக்குமே தமிழோ, ஆங்கிலமோ பேசத் தெரியாது. எனக்கும் அதைவிட வேறு பாஷை பேசவும் தெரியாது. ஆகவே, அங்கு தங்கி நின்ற நாட்களில் அவர்களுடன் ஊமைப் பாஷையில்தான் பழகினேன். ஆனாலும் அவர்கள் அங்கு தங்குவதற்கு இடமும் படுக்கையும், உணவும், பாலும், பழமும் தந்து என்னை மிகவும் கண்ணியமான முறையில் ஆதரித்தனர். நான்கு தினங்கள் தங்கிய பின்பு ஸ்ரீ நகர் செல்லும் பாதை மூடப்பட்டுள்ளதாக அறிந்தேன். அங்கிருந்தும் அதிகாலையில் மோட்டார் வண்டிமூலம் புறப்பட்டு சுமார் 200 மைல் பிரயாணம் செய்து அன்றிரவு பத்து மணியளவில் ஸ்ரீ நகர் போய்ச்சேர்ந்தேன். யம்முவிலிருந்து புறப்படும்போது ரிஷிகேசத்தைச்சேர்ந்த அச்சுதானந்த சுவாமிகளும் என்னுடன் சேர்ந்துகொண்டார்கள். அரசினரால் பிரயாணிகட்கென அமைக்கப்பட்டிருந்த விடுதியில் இருவரும் தங்கிவிட்டு மறுநாள் அங்குள்ள ஓர் ஆலயத்தில் தங்கினோம். அங்கு ராம் மந்திர் என்ற வேறோர் ஆலயத்திற்குச் சென்றிருந்தபோது சாதுக்களின் பெருங்கூட்டமொன்று அமரநாத் யாத்திரைக்காகிய ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தது. சுவாமி நிர்மலானந்தர் என்ற தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு வயது முதிர்ந்த சுவாமி அவசரமவசரமாக இவ்வேற்பாடுகளில்

ஈடுபட்டிருந்தார். அவர்கள் தங்கள் யாத்திரைக்காகிய சாமான்களையும் யாத்திரிகர்களையும் ஏற்றிச் செல்வதற்காக இரு பஸ் ஏற்பாடு செய்திருந்தனர். இவர்களுடனேயே நாங்களிருவரும் சேர்ந்து 62 மைல்களுக்கப்பாலுள்ள பஹல்காம் என்ற ஊரைச் சென்றடைந்தோம். அதுதான் யாத்திரிகர் தங்கள் யாத்திரைக்கு தேவையான சாமான்களையெல்லாம் சேகரித்துக்கொண்டு புறப்படுமிடம்.

நாங்களும் எங்களுக்குத் தேவையான கூடாரம், கம்பளி, சப்பாத்து தடி முதலியவற்றை அங்கு சேகரித்தோம். யாத்திரைக்குத் தேவையான எல்லாச் சாமான்களும் அங்கு வாடகைக்குக் கிடைக்கும். தங்கள் சாமான்களைத் தாங்களே தூக்கமுடியாதவர்கள் அங்குதான் கூலியாட்களையோ குதிரைகளையோ ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நடக்க முடியாதவர்கள் தங்களைச் சுமந்து செல்வதற்கு குதிரைகளையும் அதற்கும் முடியாதவர்கள் தங்களைச் சுமந்து செல்வதற்காகிய போனி போன்ற எல்லா வசதிகளையும் அங்கேயே செய்துகொள்ள வேண்டும். பஹல்காம் என்ற இடம் கடல் மட்டத்திலிருந்து 5,500 அடி உயரமான மலை. கஷ்மீரத்திலேயே உள்ள இடங்களில் அது ஒரு சிறந்த காட்சிக்குரிய இடமாக அமைந்துள்ளது. சிறந்த இயற்கை வளம் பொருந்தியது. அங்கு பைன் என்ற ஒரே இன மரந்தான் ஓங்கிப்பருத்து அழகாக வளர்ந்திருக்கும். இம் மரங்கள் நேராகவே இருநூறு முந்நூறு அடி உயரம்வரை வளரும். இலைகள் சவுக்கு மரத்தின் இலைகளைப் போன்றிருக்கும். மரங்களோ பத்துப்பதினைந்து அடி சுற்றளவுடையதாயிருக்கும். இம்மரங்களினால்தான் அப்பகுதியிலுள்ளவர்கள் வீடுகள் கட்டி வாழ்கின்றனர். அந்த இடம் ஒரு சிறு பட்டணமாக அமைந்துள்ளது. கடைகள், ஹொட்டல்கள் தங்குவதற்காகிய இடங்களெல்லாம் அங்குண்டு. கோடை காலங்களில் சுவாத்தியத்துக்கென அங்கு வருபவர்களுக்காக எத்தனையோ விடுதிகளும் ஒரு பெரிய கிளப்பும் அமைந்துள்ளது. அங்கு நேரு பூங்காவொன்றிருக்கிறது. யாத்திரிகர்கள் கூட்டம்கூட்டமாக வந்துகொண்டிருந்தனர். வருடந்தோறும் ஸ்ரீ நகரிலிருந்து அமரநாத் செல்வதற்காக சடி கொண்டு வருவது வழக்கம்.

— **தொடரும்.**



# நல்லை நகர் நாவலர்

**-( அ. சபாபதிப்பிள்ளை )-**

**''நல்லை நகர் ஆறுமுக நாவலர் வந்திலரேற்**
**சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே-எல்லவரும்**
**ஏத்தும் புராணாகமங்க ளெங்கே பிரசங்கமெங்கே**
**ஆத்தனறி வெங்கே யறை''.**

என்று பாடிப் போற்றினார் நாவலரை புதுக்கோட்டை நீதியரசர் ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள். சேர். பி. இராமநாதனை முதல் முதல் இலங்கைச் சட்ட சபைக்கு அனுப்பிய பெருமை நாவலருக்கே உண்டு. சேர். பி. அவர்கள் சட்ட சபையில் நாவலரை ''வீறு கொண்ட இந்து சீர்திருத்தக்காரர்'' என்று போற்றினார். கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் ''அக்காலம் ஒரு சர்வ மத சங்கம் கூடியிருந்தால் சைவத்திற்குப் பிரதிநிதியாக நாவலரையே நாம் அனுப்பியிருப்போம். விவேகானந்தர் போல் நாவீறு படைத்த அருட் பெரியார் நாவலர்'' என்று மிக அழகாகக் குறிப்பிடுகிறார். அவர் யாத்த ''நாவலர் பெருமான்'' என்ற பெரு நூலில் இன்று சைவமும் தமிழும் தழைத்தோங்க, திருமுறைகள் திகழ ''நாவலர் நாடகம்'' யாத்திருக்கின்றார்.

திருஞான சம்பந்தர் மூன்று வயதிலே தேவாரங்கள் பாடினார். சுப்பிரமணிய பாரதியார் ஏழுவயதிலே கவி பாடினார். நாவலர் ஒன்பது வயதிலேதந்தையார்கந்தர்பாடிக் குறை வைத்த நாடகத்தைப் பூர்த்தி செய்து பாராட்டுப் பெற்றார். எனவே நாவலர் நாடக ஆசிரியர் கூட, ஆகையால் இன்று நாவலர் சரித்திரம் நாடக ரூபத்தில் வருவது மிக மிகப் பொருத்தம். வாழ்க நாவலர்! வாழ்க சுத்தானந்தர்! வாழ்க தமிழ்! வாழ்க திருமுறை! வாழ்க சைவம்!

இன்று தான் நாங்கள் நாவலரை ஐந்தாம் குரவர், ஆறுமுக நாயனார் என்றெல்லாம் போற்றி விழா எடுக்கிறோம். அன்று நாவலரை ''வால் பேத்தையர்'' ''பாணாத் தலையர்'' என்றெல்லாம் தூற்றினார்கள். பிறந்த ஊராகிய நல்லூரிலேயே நாவலர் அணியும் உருத்திராட்ச மாலை

யைக் கேலி செய்யும் முறையில் பனங்காய்ப் பணிகாரத்தில் மாலை கோர்த்து அணிந்து கேலி செய்தார்கள். நல்லூர் கந்த சுவாமி கோவில் வீதியில் வைத்து வாழைப் பழத் தோலால், வடையால் எறிந்தார்கள். அக்காலத்தில் நல்லூர் கந்த சுவாமி கோவிலில் சிவாகமத்திற்கு விரோதமாக நடக்கும் பல காரியங்களை கண்டித்தார் நாவலர். ஆட்டுப்பலி, வாணவேடிக்கை, வனிதையர் நடனம் முதலியவற்றை வன்மையாகக் கண்டித்தார். இவைகள் எல்லாம் இப்பொழுது விடுபட்ட போதிலும், நாவலர் விரும்பியவாறு மூலமூர்த்தி இன்னும் சிலையால் அமைக்கப்படவில்லை.

இக்கண்டனங்கள் காரணமாக கோயில் அதிகாரிகள் காடையர் சிலருக்கு மது உண்ணக் கொடுத்து கல்லாலும், பொல்லாலும் நாவலரை அடிக்க ஏவினார்கள். ஏவல்பேய்கள் நாவலர் வரும் வழி பார்த்திருந்தார்கள். நாவலர் நெற்றியில் விபூதி துலங்க, கழுத்தில் உருத்திராட்ச மாலை தொங்க, குமிழ் மிதி அடி டக், டக் என்று சப்தம் போட, கையில் பல ஏட்டுச் சுவடிகளுடன் அச்சகம் நோக்கி வந்து கொண்டிருந்தார். நாவலர் சிவக் கோலத்தைக் கண்டதும் காடையர்கள் நினைத்து வந்ததையும் மறந்து கல்லையும் பொல்லையும் நாவலர் பாதங்களில் வைத்து வணங்கிச் சென்றார்கள். என்னே! நைட்டிக பிரமச்சாரியத்தின் சக்தி!!

'பர்சிவல்' பாதிரியாரின் வேண்டுகோளின் பேரில் விவிலிய நூலை தமிழில் மொழி பெயர்த்த நாவலர் பைபிளை நன்கு உணர்ந்திருந்தார். எனவே ''சாம்பலாண்டிகள்'', ''அஞ்ஞானிகள்'', கல்லையும் மண்ணையும் கட்டி அழும் கூட்டத்தினர்'' என்று கண்டனங்கள் செய்து, தகாத முறையில் மத மாற்றம் செய்தவர்களுக்கு நல்ல பதில் கொடுத்தார். ''சைவதூஷண பரிகாரம்'' பாதிரிமாருக்கு இங்கும் இங்கிலாந்திலும் பெரும் பீதியை உண்டு பண்ணிற்று. இந்நூல் பெயருக்கேற்ப சைவதூஷணைக்குப் பரிகாரமே யொழிய கிறீஸ்தவ கண்டனமல்ல. 1855ல் இங்கிலாந்தில் வெளியிட்ட வெஸ்லியன் மெதடிஸ்த ஆண்டறிக்கையே இதற்கு போதிய சான்று.



அறிக்கையின் தமிழாக்கச் சுருக்கம்:-

''இவ்வாண்டின் மகத்தான சம்பவம் சைவதூஷண பரிகாரம் என்ற தமிழ் நூல். அது அசாதாரணமான இலக்கியம். சைவ மதம் சைவர்களுக்கு. கிறீஸ்த மதம் கிறீஸ்தவர்களுக்கு. இலிங்காராதனை, விரதம், தீர்த்தம், யாத்திரை போன்ற இருபத்திரண்டு விடையங்களுக்கு விவிலிய நூலில் இருந்தே ஒப்பினை ஆதாரங்கள் காட்டி விளக்குகின்றது. முதல்தரமான மூளைதான் இதை எழுதியிருக்க வேண்டும். இந்நூல் நமக்கு பெரும் கெடுதல் செய்கின்றது''.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராக இருந்த ''இடைக்'' துரையும் நாவலரும் உற்ற நண்பர்கள். ஒருநாள் இடைக் துரை குடும்பசமேதராய் குதிரை வண்டியில் அதிகாலையில் உலா வந்து கொண்டிருந்தார்கள். நாவலர் வீட்டு வாசலில் ஓர் பெரிய கல் இருந்தது. அக்கல்மேல் இருந்து நாவலர் பல் துலக்கிக் கொண்டிருந்தார். நாவலரைக் கண்டதும் இடைக்துரை வண்டியை நிறுத்தி ''குட் மொணிங்! மிஸ்றர் ஆறுமுகம்! நீங்கள் உங்கள் சுவாமி மேல் உட்கார்ந்து பல் துலக்கலாமா?''

நாவலர் புன் சிரிப்புடன் எழுந்து வண்டி அருகே சென்றார்.

''குட் மோணிங்!'' என்றார் நாவலர். திரு. இடைக், திருமதி. இடைக் (மனைவி), செல்வி. இடைக் (மகள்), மூவரையும் பார்த்த வண்ணம்.

நாவலர் தொடர்ந்து திரு. இடைக் அவர்களை நோக்கி ''மன்னிக்கவும்; நீங்கள் திருமதி. இடைக் அவர்களிடம் நடந்து கொள்வது போல் செல்வி. இடைக்கிடமும் நடந்து கொள்வீர்களா''?

இடைக் துரை வெட்கி வண்டியை விரட்டிச் சென்றார்.

நாவலர் ஆற்றிய தொண்டு அளப்பில. யாழ்ப்பாணத்தில் பல பள்ளிக்கூடங்கள், ஓர் அச்சியந்திரசாலை,

சிதம்பரத்தில் ஓர் பள்ளிக்கூடம், சென்னையில் ஓர் அச்சியந்திரசாலை ஆகியன அமைத்து சைவத் தொண்டு தமிழ்த் தொண்டு செய்தார். திருவாவடுதுறை ஆதீனப் பண்டார சந்நிதிகள் நாவலரை அழைத்து ''பசு பதி பாச விளக்கம்'' என்னும் பொருள் பற்றி பிரசங்கம் செய்வித்தனர். நாவன்மையைப் போற்றி ''நாவலர்'' என்ற பட்டத்தை ஆதீன முறைப்படி சூட்டினார்கள்.

நாவலர், தியாகராசச் செட்டியார், மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகியோர் ஒருமுறை காவேரியில் குளிக்கச் சென்றார்கள். குளிர்காலம், பிள்ளை அவர்கள் ''பனிக்காலம் கொடிது'' என்றார். நாவலர் ''பனிக்காலம் நன்று'' என்றார். செட்டியார் பிள்ளை அவர்கள் சொன்னதே சரி என்றார். ஒரு சிலர் நாவலர் சொன்னதே சரி என்று விவாதித்தனர். நாவலர் தான் பிள்ளை அவர்கள் சொன்னதையே வலியுறுத்திச் சொன்னதாகக் கூறினார். எல்லோரும் எப்படி என்று கேட்டார்கள். அதற்கு நாவலர் ''பனிக்கு-ஆலம் - நன்று'' ஆலம்—விஷம், அஃதாவது பனியைவிட விஷம் நல்லது என்று விளக்கிக் காட்டினார்.

நாவலர் கவி பாடும் திறமை உடையவர். ஆனால் அவர் அதிகம் கவிகள் பாடவில்லை. எல்லோரும் பயன் அடையக் கூடிய முறைகள் வசன நடையே கையாண்டார். தமிழ் வசன நடையே கை யாண்டார். தமிழ் வசன நடைக்கு நாவலரே மூலகர்த்தா. நாவலரே முதல் முதல் ஆங்கிலக் குறியீடுகளை தமிழ் வசன நடையில் பாவித்து தமிழ் வசன நடைக்கு மெருகு கொடுத்தவர்.

''சீர்பூத்த கருவி நூலுணர்ச்சி தேங்கச்
சிவம் பூத்த நிகமாக மங்களோங்கப்
பார் பூத்த புறச்சமய விருள்கணீங்கப்
பரம் பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர் பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறை பூத்த சடைமவுலிப் பிரானார்தந்த
வார் பூத்த அறிவிச்சை தொழிலென்றோது
மதம் பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்!''

இது நாவலர் ஆசு கவியாகப் பாடிய ஓர் கவி. சொற்சுவையும், பொருட் சுவையும் மிளிர்கின்றது. '**பரம்பூத்த** சைவநிலை பாரோர் தாங்க' – பரமபதியாகிய சிவபெருமானால் சிவன் பெயரைக் கொண்டமைந்த சைவநிலை என்று கூறும் நாவலர் உண்மைப் பொருள் உணர்த்தும் வகையில் '**பார்பூத்த** புறச்சமய விருள்கள்' என்று மிக அழகாகச் சொல்கின்றார். புறச்சமயங்கள் நீங்க என்று பாடியிருந்தால் சமரச சன்மார்க்கம் பேசும் அன்பர்கள் குறுகிய நோக்கம் படைத்தவர் நாவலர் என்றிருப்பார்கள். ஆனால் நாவலர் சைவத்தில் புகுந்த புறச்சமய இருள்களையே நீங்க என்று பாடியிருக்கிறார்.



நாவலர் தற்புகழ்ச்சி விரும்பாத பெரும் மேதை. அக்காலத்தில் அபிமானிகள் சிலர் நாவலரைப் புகைப்படம் எடுக்கப் பார்த்தார்கள். நாவலர் மறுத்துவிட்டார். எனவே நாவலரின் சாயலை ஒத்த நன்மாணாக்கர் காரைநகர் ஏரம்பு ஐயர். அவர்களைப் படம் பிடித்தார்கள். அதுவே இப்பொழுது நாவலர் படமாக வழங்கப்படுகின்றது.

வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலையில் 1879 ம் ஆண்டு கார்த்திகை மாதம் பிரசங்கம் செய்த முடிவில் இதுவே எனது கடைசிப் பிரசங்கம் என்று கூறிமுடித்தார். அவ்வாறே சில தினங்களில் குஞ்சித பாத நிழலை அடைந்தார். நாவலர் இறைவனடி சேர சில தினங்களுக்கு முன் அபிமானிகள் நாவலர் உயிர் துறந்தால் அவர் பூத உடலை சமாதி செய்து, கோயில் கட்டுவதாகத் திட்டம் போட்டார்கள். நாவலர் இதை எப்படியோ அறிந்து கொண்டார்கள். உடனே அபிமானிகள் எல்லோரையும் அழைத்து தான் இறந்த பின் உடலை சைவாசாரப்படி தகனம் செய்யும்படி கட்டளை இட்டார். ஈமக்கிரியைகள் செய்வதற்குக் கூட உற்ற உறவினர், உடன் பிறந்த சோதரர்களை எல்லாம் விலக்கி சைவாசாரப்படி சிவபூசை செய்து சிறப்புடன் வாழ்ந்த சபாபதிச் செட்டியார் அவர்களையே நியமித்தார். பூதஉடல் அழிந்தது. புகழுடம்பு இன்றும் நிலவுகிறது.

நாவலரை ஈழத்தில் அநகாரிக தர்மபாலாவிற்கே ஒப்பிடலாம். இருவரும் நைட்டிக பிரமச்சாரியர்களாக இருந்து புறச்சமய இருள்நீக்கி தங்கள் தங்கள் சமயத்திற்கு அரும் பெரும் தொண்டாற்றினார்கள். நாவலர் திருக்கேதீச்சர புனருத்தாரண வேலைக்கு வித்திட்டார். தர்மபாலா புத்தகயா புனருத்தாரண வேலைக்கு வித்திட்டார். நாவலர் காலம்: *1822–1879*. தர்மபாலா காலம்: *1864–1933*.

இருவரையும் ஒரே முறையில் போற்ற வேண்டும். அநகாரிக தர்மபாலாவிற்கு தபால் முத்திரை வெளியிட்டது போல் நாவலருக்கும் வெளியிடப்பட வேண்டும். தேசிய வீரர்கள் பெயர் வரிசையில் இருவர் பெயரும் வர வேண்டும். தகுந்த இடங்களில் இருவருக்கும் சிலைகள் நாட்ட வேண்டும். கலாச்சார இலாக்கா இருவர் வாழ்க்கைகளையும் திரைப்படமாக்கி உலகறியச் செய்ய வேண்டும்.


## ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்!

| | | |
|---|---|---|
| 1. | ஆத்மஜோதி மலர் (1963) | 2.00 |
| 2. | சைவஇலக்கியக் கதா மஞ்சரி | 3.00 |
| 3. | ஆத்மநாதம் | 3.00 |
| 4. | திங்கனிச் சோலை | 2.50 |
| 5. | பாட்டாளிபாட்டு | 1.50 |
| 6. | திவ்ய ஜீவனசங்க வெள்ளி விழா மலர் | 1.25 |
| 7. | கூட்டு வழிபாடு | ·30 |
| 8. | நவராத்திரிப் பாடல் | .50 |
| 9. | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 10. | கதிர்காமப் பதிகம் | .25 |
| 11. | செல்லச்சந்நிதி பாடல் | .15 |
| 12. | கந்தர் சஷ்டி கவசம் | .15 |
| 13. | அறிவுரைக் கதைகள் | .65 |
| 14. | நித்திய கருமவிதி | .25 |
| 15. | கதிரைமணிமாலை | .50 |
| 16. | நாவலர் நாடகம் | 2.00 |

தபாற் செலவு தனி

# ஆத்மஜோதி நிலையம்

நாவலப்பிட்டி, (சிலோன்).




# வழிகாட்டும் தெய்வம் எங்கே ?

**பல்லவி**

வழிகாட்டும் தெய்வம் எங்கே!—அம்மா நல்
வழிகாட்டும் தெய்வம் எங்கே?

**அனுபல்லவி**

பழிபாவம் பகைதடுத்து பசிவேளைக் குணவளித்து,
விழிகாக்கும் இமைபோல விருப்போடு உயிர்காத்து;
— வழி.........

**சரணங்கள்**

கண்ணில் ஒளியிழந்து கதைக்கும் குரலிழந்து
பண்ணில் இசையிழந்து பார்வைக் கழகிழந்து
தண்ணீர்ப் பசையிழந்து சருகாய் உலர்ந்ததென
மண்ணில் நிலையிழந்த மடையன் எனக்கொரு நல்
— வழி...........

கண்கள் இரண்டிருந்தும் கடவுளைக் காணுது
புண்கள் இரண்டுடைய பொய்க்கண் நிலையினில்நான்
எண்காண முடியாத எழுத்தொன்றும் தெரியாத
மண்பொம்மை போலான மாயஇருள் அகற்றி
— வழி...........

அன்பின் வடிவெடுத்து அறிவுத் தெளிவெடுத்து
இன்பஅருள் சுரந்து இதயத்தொளி பிறந்து
துன்பஇருள் அகற்றி தூய்மை நிலைக்கவென்று
அன்பர் உளத்தில்நடம் ஆடிக் களித்துவந்து
— வழி...........

"திமிலைக்கண்ணன்"

# வழிகாட்டும் சுடரே நீ வருக!

(பாலபாரதி)

வழிகாட்டும் சுடரே நீ
மணம் வீசி வருக!
வையத்தின் இருள் போக்க
மகிழ்வோடு வருக!
விழியற்ற குருடற்கும்
ஒளியேற்ற வருக!
விண்ணின்பச் சுடராக
கண்ணின்று ஒளிர்க!

ஈழத்தின் ஆத்மீகக்
குரலான சுடரே!
இணையற்ற ஒளிவீசிப்
பொலிகின்ற நிலவே!
நாளுக்கும் கோளுக்கும்
நலியாத குரலே!
ஞானப் பொற் கதிரான
ஆத்மீகச் சுடரே!

இதயத்தின் இருள் போக்கும்
இறை ஞானக் கனலே!
ஈடற்ற தவம் மிக்க,
எழில் மிக்க புனலே!
**பதினெட்டு வருடத்தின்**
**வளம் மிக்க மலரே!**
பாருக்கு ஒளியூட்டும்
சமரசச் சுடரே!

குன்றாத ஆத்மீகக்
குரலே, நீ வருக!
குறையாத அழகொடு
குலவி நீ வருக!
பொன்றாத பணி நலம்
புரிய நீ வருக!
புனித நல் ஒளிவீசிப்
புவியெலாம் பொலிக!



# 'கந்தையா வைத்தியநாதன்'

''சுத்தானந்த பாரதி''

**' இப்பொழுது தான் நாடெல்லாம் சுற்றிப் பல கூட்டங்களிற் பேசி வந்தேன். ஈழநாட்டைத் திருப்பினேன், திடுக்கிட்டுப் பதறினேன்! நேற்று என்னுடன் இருந்த கந்தையா வைத்தியநாதன் இன்று மறைந்தார். அரசியலை அரசம் என்று உதறித்தள்ளி, அருளியலிற் களித்த அன்பரா காலம் சென்றார். இல்லை காலத்தை வென்றார். சிவமணி கந்தையா வைத்தியநாதரை யார் மறக்க முடியும். கேதீஸ்வரம் உள்ள மட்டும் அவர் வாழ்வார்.**

''தந்தையின் அன்புமிக்காய்
தாயெனக் கருணை செய்தாய்
நந்தமிழ்ச் சமுதாயத்து
நண்பனே! பண்பனேயோ!
விந்தையாய் உடலை நீத்து
விரைந்ததேன்! கரைந்ததேனோ?
கந்தையா வைத்தியநாதா
காலத்தை வென்று வாழ்வாய்!

''நாவலர் வந்த நாட்டில்
நன்னெறிச் சைவத்திற்குக்
காவலனாக நின்றாய்
கண்ணிமை போலக் காத்தாய்!
ஆவலாய் மீண்டும் உன்னை
அன்பினால் அணைவதென்றோ?
சிவனைத் திருத்தொண் டாக்கிச்
சிவம் பெறப் பொலிந்த செல்வா!''

எத்தனை அன்பு செய்தாய்
எத்தனை ஆர்வமானாய்
சுத்தசன் மார்க்கச் சைவம்
துலங்கிடக் கேதிசரத்தில்
எத்தனை பணிநலங்கள்
இரவொடு பகலாய்க் காத்தாய்
உத்தம வைத்தியநாதா
உனக்கொரு நமனும் உண்டோ?

நெஞ்சுடைந் தலறுகின்றேன்
நேயனே தூயனே நின்
வஞ்சமில் லாத தொண்டை
வளர்த்திடத் தமிழர் நாளும்
துஞ்சிடா துழைக்கவேண்டித்
துடிதுடித் தழைக்கின்றேனே
பஞ்சபூ தத்தைத் தாண்டிப்
பரகதி பெற்ற பண்பா!

சைவமும் தமிழும் வாழ்க!
சைவத்தைத் தாங்கி நின்ற
*ஐவரும் வாழ்க! ஆறும்
அன்பனும் நீயும் வாழ்க!
நைவுறு நிலைமை மாறி
ஞாலமும் அமைதி சேரத்
தெய்வத்தை வணங்கிச் சீவன்
சிவமயமாக வாழி!

*ஐவர்: அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கர், நாவலர்

## புரட்சி

ஜனசமூகங்கள் வளர்ச்சியாலும் புரட்சியாலும், முன்னேறியிருக்கின்றன. ஒவ்வொன்றைப் போலவே மற்றொன்றும் அவசியமாகும். இறப்பானது புரட்சி; பிறப்பானது வளர்ச்சி. மனிதனுடைய முன்னேற்றத்துக்குப் பிறப்பைப் போலவே இறப்பும் இன்றியமையாததாகும். சரித்திரமானது அமைதியான முன்னேற்றத்தைவிட அற்புதமான புரட்சியையே அதிகமாகக் கூறுகிறது.

காந்தி.



# சைவத்திற் சிவம்

(வருணானந்தா)

"எல்லாம் சிவமயம்" என்பர் சான்றோர். என்றும் உள்ளது எதுவோ அதுவே சிவம். ஒளிமயமானது சிவம்.

'வெளியாகி வெளிவெளியாய் வெளியிடைமேல் வெளியாய்
மேல்வெளிமேற் பெருவெளியாய்ப் பெருவெளிக்கோர் வெளியாய்'

திகழ்வதும் அதுவே.

'அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே'

வியாபித்திருப்பதும் சிவமே.

சிவன் சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டுகின்றான், சிவம் அருள்நிறைந்ததாகின்றது. அவனே சித்தத்தினுள்ளே சிவலிங்கமும் காட்டுகின்றான், சிவம் ஆனந்தமுள்ளதாகின்றது. வாக்காலும் மனத்தாலும் அளவிட்டறியப் பெறாத சிவம்; சொல்லிறந்து மனமிறந்து அருளால் அறியத் தக்கது.

சிவத்தின் அனந்த கல்யாண குணங்களில் அநுக்கிரகத்தின் பொருட்டுச் சில முக்கியமான குணங்களாலமைந்த கரசரணாதி அவயவங்களை யுடையதாய்த் தியானித்து அதன் அருளாகிய திருவடியை விரும்பி அதன் அருளாலே அதனையே வணங்கி வழிபட்டு வருவோர் சிவனடியார்கள். ஒரு குறையுமில்லாதவர்கள்.

படிமுறையாக சிவத்தை அடைய நான்கு வழிகள் உள. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. சரியையாவது சிவபெருமானைப் புறத்தே வழிபடுவது; கிரியையாவது அகத்தும் புறத்துமாக வழிபடுவது; யோகமாவது அகத்தே வழிபடுவது; ஞானமாவது அதன் வழி அடங்கி நிற்பது. சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும் நான்கும் மோட்ச காரணங்களாம். இவற்றுள் ஞா

னமே முக்கிய காரணமாம். சரியையின்றி கிரியை இல்லை. கிரியையின்றி யோகம் இல்லை. யோகமின்றி ஞானமிலே. ஞானமின்றி மோட்சமில்லையாதலால் மோட்சத்துக்கு சரியையாதி நான்கும் முறையே காரணங்களாகும்.

மேற்கூறிய வழிகளை அடைவதற்கு ஆன்மாக்கள் நல்வினைகளாலாய தருமத்தை இடையறாது செய்யவேண்டும். ஆன்மாக்களைக் குறித்துச் செய்யப்படும் ஆதுலர்க்கன்னம் ஓதுவார்க்குணவு முதலிய முப்பத்திரண்டு தருமங்களும் **பசுதருமம்** எனப்படும். சிவத்தைக் குறித்துச் செய்யப்படும் தருமம் **சிவதருமம்** எனப்படும். இவ்விருவகையான தருமங்களுள் சிவதருமமானது **பொதுச் சிவதருமம், சிறப்புச் சிவதருமம்** என இருவகைப்படும். சிவதீக்கையின்றிச் சிவபெருமானைக் குறித்துச் செய்யப்பெறும் சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆகியவை பொதுச்சிவதருமம் எனப்படும். சிவதீக்கையுடையோராற் செய்யப்பெறும் சரியை, கிரியை, முதலியவை சிறப்புச்சிவதருமங்களாகும். இவைகள் அசுத்தாவத்தையிற் செய்யப்பெறும் சிவபுண்ணியங்களாகும். மேலும் சுத்தாவத்தையிற் செய்யப்பெறும் புண்ணியங்களும் உண்டு. அவைபத்தாகும். அவையாவன, தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பனவாம்.

ஆன்மாக்கள் எண்ணில்லாதவைகள். அனுதியே உண்டு அவைகளுக்கு இயல்பாகவே இச்சா, ஞான, கிரியா, சத்திகள் உண்டு. ஆனால் அவைகள் அனுதியே ஆணவத்தால் தடைபெற்றிருக்கின்றன. ஆதலால் ஆன்மாக்கள் செயலற்று மூடமாய்க் கிடந்தன. ஆன்மாக்களைப்போல் அனுதியாயுள்ளவரும் யாதொன்றாலும் தடைப்படாத இச்சா ஞானக் கிரியா வல்லமைகளையுடையவருமாகிய சிவபெருமான் தமது பேரருளால் அவ்வான்மாக்களுடைய தடையை நீக்கி அவர்களுக்குத் தமது பேரானந்தத்தைக் கொடுக்கத் திருவுளங்கொண்டு அநாதியாயுள்ள மாயையிலிருந்து தமது சக்திகளால் அந்த ஆன்மாக்களுக்குத் தநு கரண புவன போகங்களைக் கொடுத்தார். அவைகளைப்பெற்ற ஆன்மாக்கள் அவைகளின் உதவியால் தமதறிவிச்சை செயல்கள் முறை முறையாக விளங்கப்பெற்று சிவத்தை அடையுங்காறும், உறுகின்ற சமயங்கள், பலவுள. அவர்கள் அவற்றைப்புறப்புறம், புறம், அகப்புறம், அகமென நான்காய்த் தொகுத்து உலோகாயதம் முதல் சிவாத்துவிதவாத சைவமீருக இருபத்து நான்காய் வகுத்தார்கள்.



இங்ஙனம் வகுக்கப்பெற்ற இருபத்துநான்கு சமயங்களும் இவற்றி நின்று விரிந்த சமயங்களும் கொண்ட கொள்கைகளெல்லாம் சைவசமயத்தில் அடங்கியவையேயாகும். ஆதலால் அவையாவும் சிவத்திலடங்கியவை.

கடவுள் ஆன்மா, மலம், மாயை, கன்மம் என்னும் பொருள்களின் இயல்புகளை உள்ளவாறு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்து விளக்கும் சைவசமயம் உண்மையும் சிறப்புமுடையது. சைவத்திற் சிவம் பெரும் பேருண்மையும் உயர்வும் கொண்டதாகும்.

**ஓம் தத் ஸத்**

---

# அருள் நெறி காட்டிய தாய்

(சுயசரிதையின் சுருக்கம்) (சென்ற மாதத் தொடர்ச்சி)

(புலவர். சி. விசாலாட்சி)

தமிழ்நாட்டில் தனியப் பெண்கள் வசிப்பதை யாரும் விரும்புவதில்லை. அதுபோன்று பெண்கள் தவம் செய்வதை யாரும் விரும்பமாட்டார்கள். எனவே என் வாழ்க்கை முறை யாவும் அவ்விட மக்களுக்குச் சந்தேகத்தைக் கொடுத்து விட்டது. ஆனால் எனக்கு உறுதுணையாக இருந்த பாட்டியின் உதவியால் எனக்கு ஒருவித குறையும் ஏற்படாது இருந்தது. மட்டக்களப்பில் அடர்ந்த காடு. அக்காட்டிற்குள்யாரும்செல்லவேமுடியாது. அக்காட்டிற் கருகிற்தாம் எம்முடைய குடிசையும் அமைந்திருந்தது. எமக்கு வேண்டிய அன்றாட உணவுகளைப் பாட்டியம்மா எப்படியோ சேகரித்து வருவார். காட்டிற்குள் உள்ள கொன்றை மரத்தின் கீழ் நான் தினமும் தியானம் இருப்பேன். காலையிற் சென்றால் மாலையில் வருவதுமுண்டு. இரண்டு மூன்று

நாட் கழித்து வருவதுமுண்டு. எப்படி எக்காலத்தில் வந்தாலும் பாட்டியம்மா சந்தேகித்ததே இல்லை. நான் தெய்வ பக்தியிலீடுபட்டு பரமனைத் தியானம் பண்ணுவதைப் பூரணமாக நம்பினுர். அதனுல் என் விடயத்தில் மட்டும் அவர் சிரத்தை யெடுத்ததே இல்லை.

பெண் என்ற தாயினுற்ருன் உலகம் சிறந்த முறையில் நடக்கின்றது. தாயின் செங்கோலாட்சி இல்லையேல் இயற்கையின் மாறுபாட்டால் உலகம் அல்லற்பட்டு அழிந்துவிடும். பெண்ணே மனித சமுதாயத்தின் தெய்வம். நல்ல பெண்களால் ஆத்மீக வாழ்வு காண முடியும். சிறந்த முனிவர்களையும் சித்தர்களையும் ஞானிகளையும் ஈன்று உருவாக்கித் தருபவள் பெண்ணே என்று உணர்ந்த மனித இனங்கள் பெண்களிற் குறை காணத் துடியாய்த் துடித்து வருகின்றனர். பெண் துறவு பூண்டு விட்டால் பல குற்றங் குறைகள் கூறுவர். ஓ இப் பெண்ணுக்கு நோயாக இருக்க வேண்டும் என்று பல காரணங்கள் கூறுவது தமிழ் மக்கள் இயல்பு. இவைகளுக்கு நான் விதி விலக்கல்ல. யார் எதைக் கூறினுலும் அசையா உள்ளத்துடன் ஒன்றிய மனப்பான்மையுடன் வாழ்ந்து வந்தேன்.

இந்திய நாட்டில் அநேக ஆண்டுகள் இருந்த ஆச்சிரமப் பழக்க வழக்கங்களுடன் இசை பாடுவதிலும் வீணை வாசிப்பதிலும் பாடுவதிலும் வல்லவளா யிருந்தேன். அத்துடன் சமையல் வேலையிலும் திறமையுடையவளாய்க் காணப்பட்டேன். நான் படித்த காலத்திற் குறிப்பிட்ட இளம் பண்டிதர் இப்போது மாற்றலாகி மட்டக்களப்பு கிறீஸ்தவ பாடசாலையிற் கடமையாற்றி வந்தார். அவர் என் திறமைகளை அறிந்து தம் பாடசாலையில் என்னையும் ஆசிரியை ஆக்கினுர். இதனுல் காட்டைச் சார்ந்த இடத்தை விட்டு நகரத்திற்குள் நாம் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பாடசாலையில் கடமைகளை முடித்து விட்டு வீடு திரும்புவேன். எம் வேலைத் திறன்களை அறிந்த பிள்ளைகள் என்னுடன் அதிக தொடர்பு கொண்டனர். நாள் தோறும் காலை மாலைகளில் இன்னிசை விருந்து எமதில்லத்தில் நடைபெறும். சில கைப்பணிகளும் நடைபெறும். எப்போதும் உண்மை நடமாடு மிடங்களில் எதிர்ப்புகளும் இருக்கத்தானே செய்யும். பொய்யுலகில் மெய்யின்பங்களை மெய்யென்று வாழும் மக்களிடையே பல சந்தேகங்கள்



எழத்தான் செய்யும். இதன் பயனுக பலர் உண்மையுடன் வாழும் உத்தமர்களுக்குக் கெடுமதி செய்வதிற் பின்தங்க மாட்டார்கள்.

அன்று கல்லூரிக்குச் சென்று வீடு திரும்பினேன். அப்போது பாட்டியம்மா வீட்டில் இல்லை. வெள்ளிக்கிழமையாகையால் மாமாங்கப் பிள்ளையார் கோவிலுக்குச் சென்றேன். வழியில் அரசமரத்தின் கீழ் ஓர் பெண் குழந்தை அழுது கொண்டிருந்தது. கிட்டச் சென்றேன். இருபத்தைந்து மதிக்கக் கூடிய ஒரு இளம் பெண் உயிர் போகும் தறுவாயிற் கிடந்தாள். அவள் என்னைப் பக்கலிற் சைகை காட்டி அழைத்தாள். அம்மா இக் குழந்தையை என் தகப்பனுரிடம் சேர்த்து விடுவாய். வழியிற் பசியின் கொடுமை தாங்காமல் அதோ தெரியும் பழத்தை உண்டேன். அதன் பயனுல் இறக்கும் தறுவாயில், தெய்வம் போல் வந்தாய் என்று கூறித் தன் தகப்பன் இருக்குமிடத்தையும் கூறினுள்.

அவள் கூறிய இடம் நாம் முன் இருந்த காட்டைக் கடந்து அப்பாற் செல்ல வேண்டியிருந்தது. காடோ அடர்ந்த காடு. கொடிய மிருகங்கள் சஞ்சரிக்கும் இடம். அதனூடாக ஒற்றையடிப் பாதை சென்றது. இறந்த பெண் சொன்ன குறிப்பின்படி ஒற்றையடிப் பாதை வழியாகச் சென்றேன். பொழுது நன்ருக இருட்டி விட்டது. செய்வதறியாது திகைத்தேன். கொடிய மிருகங்களின் இறுமற் சத்தம் காதைத் துளைத்தன. பெரிய பெரிய யானைகள் கூட்டம் கூட்டமாய் பிளிறிய வண்ணம் மரங்களை முறித்தன. நான் இறந்தாலும் அப் பெண்குழந்தையை உரியவரிடத்திற் பொறுப்பிக்கும் கடமையொன்றிருந்தமையால் தெய்வ சிந்தையுடன் சென்றேன். பாதை தெரியாமையாற் பலநாள் திரிந்து அலைந்தேன். காட்டில் உள்ள பழங்களைத் தேர்ந்தெடுத்து சாறைக் குழந்தைக்குக் கொடுத்து சக்கையை நான் உண்டேன். காடு பூராவும் அலைந்து அலைந்து திரிந்து விட்டேன். இடத்தைக் கண்ட பாடில்லை. பல இன்னற்பட்டும் விட்டேன். இப்படியே மூன்றுமாதம் கடந்து விட்டது. நானும் பேய் வடிவமானேன். குழந்தையும் பேய் வடிவமானது. பார்ப்பார் உதறித் தள்ளும் முறையில் இருவரும் அமைந்து விட்டோம்.

ஒருநாள் நடுநிசி ஆள் அரவம் கேட்டுத் திடுக்கிட்டெழுந்தேன். வந்த ஆளும் எம்மைவிடக் கேவலமாகவே காணப்பட்ட போதிலும் அருள் வடியும் வதனத்துடன் காணப்பட்டார். கழுத்தில் உருத்திராக்க மணி, கையில் கமண்டலம் மான்தோல் குடை முதலியவற்றுடன் காணப்பட்டார். அவர் என்னை நெருங்கிக் குழந்தாய் எழுவாய் இன்றுடன் உன் இடர்யாவும் களையப்பட்டன. இக்குழந்தையுடன் என்னுடன் வருவாயாக வென்று அழைத்துக் கொண்டு கிராமத்தை நோக்கி நடந்தார். நானும் அக்குழந்தையும் அவரைத் தொடர்ந்து நடந்தோம்.

கிராமத்தை அடுத்த சிறு கிராமத்தில் ஓர் ஓலைக் குடிசைக்குள் நாம் மூவரும் புகுந்தோம். அங்கு மூதாட்டி காவியுடை அணிந்து புன்முறுவலுடன் வரவேற்று எனக்கும் அக்குழந்தைக்கும் குளிக்க நீர் மாற்றுடை உணவு வகைகள் தந்தாள். அவளின் உபசரிப்பால் நானும் குழந்தையும் தேகநிலை பெற்றுவிட்டோம். எல்லாம் வல்ல அந்தக் குருநாதன் அருளால் எம்மை அழைத்து வந்த அக்கிழவரே குருவாக மாறி பல ஞானநூல்களை எனக்குப் போதித்தார். தாயார் வழிகாட்டியாய் உடன் இருந்து வந்தார். நானும் அக்குழந்தையும் காலகெதியில் பார்ப்பவர்க்குத் தாயும் சேயுமாக மாறினோம். அந்த இருமூதாதையர் போன்றவர்களாகிய தெய்வங்களும் மறைந்து இன்றுடன் பதினைந்து வருடங்களாகின்றன. என்னிடம் அரிய நூல்களைக் கற்றும் சாதனைகளைப் பயின்றும் சிறந்த பெண்மணியாய் பார்வதியென்ற பெயருடன் பாருக்குள் மாணிக்கமாய்த் திகழ்கின்றாள்.

எனவே என் அன்புக் குழந்தாய் உன் அறிவிற்கெட்டிய அளவில் இம்மூவர்களை யார் யார் என்று நீயே கற்பனை செய்து கொள்வாய். ஆக மனித வாழ்வின் சிறப்பாகப் பெண்கள் வாழ்விற் பல வேதனைகளும் சோதனைகளும் ஏற்படத்தான் செய்யும். அவற்றையும் தம் 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்ற பழமொழிக்கிணங்க உன்னைப் பொறுத்த மட்டில் நீ பெரிய பாக்கியசாலி. நான் பட்ட இன்னல்களில் அணுவளவேனும் உனக்கு வராதிருக்கவே பரந்த என் வரலாற்றைச் சுருக்கிக் கூறிவிட்டேன்.



பல்லாண்டு காலங்கட்கு முன் பெண்களும் ஞானிகளாய் யோகினிகளாய் வாழ்ந்தார்கள். அதற்குச் சான்றுகள் இன்னும் உள்ளன. இடைக்காலத்திற் றோன்றிய சில ஆடவர்களால் பெண்கள் சமுதாயம் நசுக்குண்டு அல்லற்பட்டுச் சீரழிந்து வருகின்றது. இனிப் பெண்ணுலகம் வாழவேண்டின் பெண்களே சிங்கம் போன்று எழவேண்டும். அவர்களின் ஒத்துழைப்பு வேண்டும். பெண்கள் ஆச்சிரம வாழ்க்கை நடத்தியபின் அல்லது ஆச்சிரமத்திற் பயிற்றப்பட்ட பின்பு இல்லறம் புகுந்தால் அது நல்லறமாக மாறும். அதனைப் பின் கூறுகின்றேன் என்று தாய் கூறி முடித்தாள்.

---

**கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் 2-வது சைவ மகாநாடு நான்கு நாட்கள் கைதடி நாவற்குழி மறவன்புலோவில் நடைபெற்றது. நான்காம் நாள் சைவப் பெரியார் த. குமாரசாமிப் புலவர் தலைமையுரையில் பேசியதன் சுருக்கம். (தொகுத்தவர் செயலாளர். ஆ. கந்தையா)**

# ஜீவகாருண்யம்

**எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நின்**
**தெய்வ அருட்கருணை செய்வாய் பராபரமே.**

- தாயுமானவர்.

உலகம் என்பது பலவாய உயிர்த் தொகுதிகளும் கூடி வாழ்வது என்பது காட்சியினால் நாம் அறியத் தக்கதாம். பல உயிர்கள், எனவே ஓரறிவு முதல் ஐந்து அறிவுவரை உள்ளனவற்றை இயற்கை அறிந்து வாழும் கடப்பாடு மக்கள் கூட்டத்தினருக்கு இன்றியமையாதது. ஆகவே மக்கள் தாமே ஆறறிவு உயிரே என தொல்காப்பியனார் கூறியிருப்பது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. பிறப்பு வகைகளால் மக்கட் பிறப்பு உயர்ந்தது என்ற கருத்தினால் விசேடமான ஓர் அறிவு இறைவனால் மக்களுக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த விசேட அறிவுதான் எவற்றையும் ஆராய்ந்து பார்க்கின்ற சிறப்புடையது. மக்கள் தம்மை ஒத்தவரோடு கூடி வாழவேண்டுமென்பவரே தவிர தனித்து வாழ்பவர்

கள் அல்லர். மக்களினுடைய அறிவு பரந்த மனப்பான்மையுடன் செல்லுவதாலன்றி கூடி வாழும் காலத்திலும் மகிழ்ச்சி அடைதல் அரிது. எல்லாவுயிரும் தாம் உயர்ந்த நிலையில் இன்பமாக வாழ வேண்டும் என்றே கருதுகின்றன. வினை காரணமாக இறைவனாலே கொடுக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட தோற்றங்கள் உடையனவாய் உயிர்கள் விளங்குகின்றன. இவற்றை நால்வகைத் தோற்றம் எழுவகைப் பிறப்பு எண்பத்துநான்கு லட்சம் யோனிபேதம் என சாத்திரங்கள் செப்புகின்றன. நாம் இன்பமாக எப்படி வாழ விரும்புகின்றோமோ அதுபோல் மற்றைய பிராணிகளும் இன்பமாக வாழ விரும்புகின்றன.

ஒன்றாக நல்லது கொல்லாமை; படை கொண்டார் நெஞ்சம் போல் நன்றாக்காது ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம்; தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதின் ஊனுண்பான் எங்ஙனம் ஆளும் அருள்'' இந்த வாக்குகளைச் சிந்திப்பவர் எவராயினும் பிறவுயிருக்கு இன்னாசெய்ய எண்ணுவரோ. பசு என்பது ஆன்மாக்களுக்குள்ள பொதுப் பெயர். அதைச் சிறப்பாகப் படைத்திருப்பன நாம் வளர்க்கும் பசுக்கள். சைவர் எனப்படுகின்ற மக்களுக்கு சைவம் என்னும் அடையாளத்தைக் காட்டுவதற்குரிய விபூதியைப் பெறுவதற்கு மூலமாய் இருப்பது பசு. இறைவன் திருமுடியில் அபிடேகம் செய்வதற்குப் பஞ்ச கவ்வியத்தைத் தருவது பசு. மக்களை உடல் நலத்துடன் வாழ்வதற்குரிய பொருள்களைத் தருவது பசு பசுவோம்பல் என்பது ஒரு தனிச் சிறப்பான தரும நெறியாகும். பசுக்களைப் பூசித்தல் வேண்டுமென சாத்திரங்களிற் சொல்லப்பட்ட சிறந்த நெறியாகும். சிவபூசை செய்பவர்கள் தாமும் அது முடிந்தவுடன் பசுக்களையும் பூசித்தல் வேண்டும் என்று கூறுகின்றது இத்தகைப உயர்ந்த பசுக்களைக் கூட பொருள் ஒன்றே பெறுதல் காரணமாக அதன் ஊனை வாங்கி உண்டும் மக்களிற் சிலர் மகிழ்கின்றார்களே என்பதைக் கேட்கும்தோறும் ஜீவகாருண்யம் எங்கே? சைவம் எங்கே? வாழ்க்கை எங்கே? மக்கட் பிறப்பின் அறிவுடைமை எங்கே? என்று எண்ணி வருந்த வேண்டிய நிலையில் இருக்கின்றோம். மக்கட் பிறப்பினராகிய நாம் எல்லாம் மற்றைய உயிர்களும் வாழ்வதற்கு இடர் செய்யாது துணை செய்வது கடமையாகும். மக்கள் ஒரு தீமையைச் செய்யுங்கால்



தங்கள் மனமே சாட்சியாய் இருந்து தகாதனவற்றைச் செய்கின்றோம் என்ற உள்ளுணர்ச்சியைக் கொடுக்கும். அந்த உணர்ச்சியை வஞ்சித்து வாழத் தொடங்குதல் மக்கள் பண்பினருக்கு ஏற்றதன்று.

**வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்.**

என்னும் வள்ளுவர் வாக்கால் அறியலாம். தகாதனவற்றைச் செய்து அதைப் பெருமையென்றோ இன்பமென்றோ கருதி வாழ்பவரை நோக்கி மணிவாசகப் பெருமான் அருளிக் கூறிய வாக்கை எண்ணிப்பார்த்தல் இன்றியமையாதது. ''வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைபட்டாழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே சூழ்கின்றாய் கேடு உனக்கு சொல்கின்றேன் பல்காலும் வீழ்கின்றாய் நீ அவலக்கடலாய வெள்ளத்தே'' இதனைச் சிந்திக்குங்கால் மனம் நல்லனவற்றை நினைக்க வாக்கு நல்லனவற்றைச் சொல்லக் காயம் நல்லனவற்றைச் செய்யவேண்டும், என்னும் கருணையினாலே இறைவன் தந்தது, இம்மக்கட் பிறப்பு என்பது தெளிவாகும். பகுத்துண்டு ''பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாந் தலை'' பல்லுயிர்களையும் ஓம்பவேண்டும் என்னும் கட்டுப்பாடு படைத்தநாம் அந்நெறியில் நின்றும் தவறி சிற்றுயிர்களுக்கு இடுக்கண் செய்தலோ கொலை செய்தலோ அவற்றின் ஊனை உண்டலோ இறைவனுடைய திருவுளத்துக்கு மாறான செயல்களாகும்.

அம்மா என அலற ஆருயிரைக் கொன்றருந்தி, இம்மானிடர் எல்லாம் இன்புற்றிருக்கின்றார், அம்மாவெனும் சத்தம் கேட்ட சிறந்தவராயினும் நிலையில்லாத உடலைத் தானே பெற்றிருக்கின்றோம் என நினைந்து பிற உயிர்களை எம்முயிர்கள்போல எண்ணி இரங்கி இறைவன் கருணையைப் பெறுவதற்கு முயல்வோமாக.

# நேயத்தே நின்ற நிமலன்

(பண்டிதை. த. பூங்கொடி)

மலம் அற்றவன் நிமலன்; ஆன்மாக்கள் யாவும் மலத்தினால் பீடிக்கப்பட்டன. இறைவன் ஒருவனே இயல்பாக மலத்தினின்றும் நீங்கியவன்; அவன் நிர்க்குணன், நிராமயன், எப்பொருளிலும் நீக்கமற விளங்குபவன்; எப்பொருளிலும் தங்குபவன். ஆயினும், அவனருளே கண்ணாகக் காணினல்லால் இப்படியன் இவ்வுருவன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன், என்றெடுத் தியம்பலாகாது. அப்படிப்பட்ட அந்த நிமலன் மாசிலா அடியவர்தம் நேயத்தே நிலைபெற்று நிற்பன். அங்ஙனம் இயல்பாகவே மாசற்றிருந்தவாறே தன்னை நினைப்பாருடைய மன மாசுகளையும் அறுத்துத் தன்னோடு சேர்த்துக் கொள்ளு மியல்பினன்.

இறைவன் உயிர்களுடன் இரண்டறக் கலந்து நிற்கின்றான். அந்த நிலை பேதமுமன்று. அபேதமுமன்று. பேதாபேதமுமன்று. இங்ஙனம் ஒன்றாய், வேறாய், உடனாய், நிற்கும் பரம்பொருளின் உணர்ந்தவர் உணர்ந்தவாறே எடுத்தியம்பினர்.

> **''விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்**
> **மறைய நின்றுளன் மாமணிச் சோதியன்''**

என்கிறார் அப்பர்.

''உணர்ந்தார்க்கு உணர்வரியோன்'' என்றனர் மணிவாசகர். மனம், மொழி, மெய்களால் இயைந்து இறைவனைக் காண்டல் ஞான நிலையில் பக்குவம் முதிர்ந்தோர்க்கே ஓரொருகாற் கூடுமேயன்றி இடையறாது நிகழ்தலின்று. ஆதலின் ஒருகாற் தன்னை உணர்ந்தார்க்கு கருவியாகிய சித்தவிருத்தியும் ஒடுங்குதலான் மீண்டும் உணர்வரியோன் என உணர்த்தப்பட்டது.

> **''பார்பத மண்ட மனைத்துமாய் முளைத்துப்**
> **பரந்த தோர் படரொளிப் பரப்பே**
> **நீருறு தீயே நினைவ தேலரிய நின்மலா''**

என்கிறார் இன்னோரிடத்து.



பரம்பொருட் தன்மை மனம் மொழி மெய்களைக் கடந்ததொன்று. ஆதலின் கட்புலனாற் காணத் தக்கது அன்று. இறைவன் பாச ஞான, பசு ஞானங்களாற் காணப்படாதவனும், பதிஞானமாகிய சிவஞான மொன்றாலே காணத்தகும் பெற்றியுமுடையன். இதனைச் சிவஞானபோதம்

> **''ஊனக் கண்பாச முணராப் பதியை**
> **ஞானக் கண்ணிற் சிந்தை நாடி''**

என்கிறது. அதன் விளக்கமாகிய சிவஞான சித்தியும் ''பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதி ஞானத்தாலே நேசமொடும் உள்ளத்தே நாடி'' எனக் கூறுகின்றது. இம் முத்திற ஞானங்களுள் பதி ஞான மொன்றே இறைவனை அறிதற்குரிய மெய்ஞ் ஞானம்.

பிரம விட்டுணுக்களாலும் அறிய முடியாத அந்தப் பரம்பொருள், அகங் குழைந்து அன்புருகும் அடியவர்தம் நேயத்தே நிலைபெறுவன். அகங் குழைந்து அன்புருகா நிலையில் அவனை உணர முடியாது. ''அழுதாலுன்னைப் பெறலாமே'' எனவும் 'ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி' எனவும் கூறப்படுகிறது. ஆண்டவனை நேயத்தே நினைந்து நினைந்து அழவேண்டும். ஆனந்தக் கண்ணீர் சிந்த வேண்டும். அப்பொழுது அந்தர்யாமியாய் மனதில் விளங்குகின்ற பேரொளியைக் காண வாய்ப்பு ஏற்படும்.

> **'நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே**
> **புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்''**

என்றனர் அப்பர். நேயமெனினும் அன்பெனினும் ஒக்கும். இடமும் இடத்து நிகழ் பொருளுமாய ஒற்றுமை கருதி நேயத்தே நின்ற நிமலன் எனப்பட்டது. அன்பு எங்கெங்கு நிலைபெறுகிறதோ அங்கெல்லாம் சிவம் பிரகாசிக்கின்றது. ''அன்பும் சிவமும் இரண்டென்பரறிவிலார்—அன்பே சிவமாவதாருமறிந்தபின்—அன்பே சிவமாயமர்ந்திருப்பாரே'' என அன்புதான் சிவம் என்கிறது திருமந்திரம். அன்பு நிலை பெற்றவிடத்து நிமலனாய அப் பரம்பொருள் விளங்கியும், அல்லாதவிடத்து விளங்காமலும் நிற்கின்றான்.

அன்பு வலையிலே ஈர்ப்புண்ட வாதவூரர் தம் அனுபவம் பலவற்றைப் பலவாறாக விளக்கினர்.

‘‘அன்பருள்ளம் கரந்து நில்லாக் கள்வனே நின்றன்
வார்கழற் கன் பெனக்கு
நிரந்தரமா யருளாவாய் நின்னை
யேத்த முழுவதுமே’’

அன்பர் தம் நேயத்தே ஒன்றி நின்றும் அவர்தம் அறிவால் அறிதற்கு அரிய நிலையிலுள்ளா னென்பது தோன்ற கள்வனே என்றார். அன்பு நிரந்தரமாய் வேண்டும் என்றார். ஒரொருகாற் தோன்றி மறைதலின்றி இடையறாது அன்பு நிகழ்வதாக வேண்டும் என்றனர். நின்னையன்றி வேறொன்றையும் வணங்காத்தன்மை தோன்ற நின்னை முழுவதும் ஏத்த வேண்டுமென்கிறார். மெய்யன்பர் தம் நேயத்தே இமைப் பொழுது தானும் இறைவன் பிரிந்திருப்பதில்லை. இதனை யுணர்ந்த மணிவாசகப் பெருமான் ‘‘-நினையின் பாகமும் பிரிவது திருக் குறிப்பன்று’’ என அவர்தம் தன்மையை உணர்த்தினர். செம்மலர் நோன்றாள்களைச் சேரவொட்டாது தடுக்கும் அம் மும்மல அழுக்கை ஞானநீராற் கழுவி அயரா அன்பு செய்யும்படி கருணை செய்து தன்னை நினையத் தருகின்றவனும் நேயத்தே நிலைபெற்று நிற்கும் நிமலனே யாவான்.

செம்பிற் கழிம்பெனப் பற்றியுள சகசமலத்தால் ஆன்மாக்கள் பல்பிறப்பிடைக் கிடந்து உழலும். அவ்வாற்றான் அனுபவ ஞானமுண்டாக தம்மை உடையானாகிய பரம்பொருளை ஒருவாறு உணரும். உயிர் முன்னே செய்துகொண்ட புண்ணிய விசேடத்தால் தனக்கு அந்தர்யாமியாவது உள்ளே நின்ற முழுமுதற் கடவுள் குருவடிவங்கொண்டு சிவதீக்கை செய்து ஐம் பொறிகளாகிய வேடருட்பட்டு அயர்ந்தனை. நின் பெருந்தகைமையறியாது இடர்ப்பட்டாய். நின் பெருந்தகைமையாவது இவ்வியல்பினதென்று அறிவிக்க. அறிந்தவுடன் அவ்வேடரை விட்டு நீங்கி அம்முழுமுதற் கடவுளின் திருவடிகளைச் சேரும். குறையுணர்வாகிய பசு அறிவாலும், பாச அறிவாலும், உணரப்படாத பதியை அவனது திருவடி ஞானத்தால் தன்னறிவின் கண்ணே அறியும். இங்ஙனமாக அறிவிக்க அறியுமியல்புடைய ஆன்மாவிற்கு அறியும்படி இறைவன் அத



னோடு ஒருங்கியைந்து அறிவித்து அறிந்து வருதலினால் மலமாயை தன்னொடு வல்வினையுமின்றாயொழிய சிவம் வேறு தான் வேறு இன்றி அவனே தானேயாய் ஒற்றுமைப்பட்டு அயரா அன்பின் நிலைபெற்று நிற்கும். இதனைச் சிவஞானபோதம்

‘‘காணும் கண்ணுக்குக் காட்டு முளம் போற்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலி
னயரா வன்பி னரன் கழல் செலுமே’’

இவ்வாற்றான் அன்பர் தம் நேயத்தே நிலைபெற்றுறையும் நிமலன் ஆன்மாக்கள் இருவகை வினையிடத்தும் கிடந்துழலாமற் காத்து முத்தியாம் விடுதலை யளிப்பன். மெய்யன்புப் பேற்றிற்கு உறுதுணையாய் நிற்பது மனம். மாசிலா மனத்துடன் அன்பு செய்கின்றவரிடத்துச் சோதியாகவும், அல்லாதாரிடத்துத் துன்னிருளாகவும் விளங்குவான். புறத்தே செல்லுமியல்புடைய பஞ்சேந்திரியங்களையும், அந்தர் முகமாகத திருப்பி வழிபட்டு நேயத்தே நின்ற நிமலனைக் கண்டனர். மெய்யன்புடையார் சிந்தையே கோயிலாகக் கொண்டருளி அன்பர்தம் நேயத்தே நிலைபெற்று நிற்கும் நிமலன், அருளைப் பெற்றுய்ய அவனருளாலே அவன் தாள் வணங்குவோமாக.

---

# மனம்

மனம் எப்போதும் நாம ரூபத்திலே நாட்டமுடையது. அதனுடைய இச்சையெல்லாம் தான் இந்த ஊனக்கண்ணால் இவ்வுலகில் காணக்கூடிய நாம ரூபமுடைய வஸ்துக்களிடத்தில்தான், இக்கண்ணுக்குப் புலப்படுகிறவை யாவும் நாம ரூபமுடையனவே. அதாவது தனக்கென ஒரு உருவமும், ஒருபெயருமுடைய பொருள்களே. எப்போதும் உள்ளவை மூன்று பொருள்களே. அவை எவையெனின்,

(1) உலகம், (2) ஆத்மா, (3) கடவுள். இவற்றை முறையே ஜகம், ஜீவன், பரம் என்றும், பாசம், பசு, பதி என்றும், சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவற்றில் ஜீவன், பரம் இரண்டும், அனாதி நித்தியப் பொருள்கள். உலகம் அனாதி நித்தியப் பொருள். ஆகவே, பிரபஞ்சத்தில் சச்சி

தானந்த சொரூபத்தையுடையதும், எங்கும் நிறைந்தது மாகிய ஒரு பொருளும், நாமரூபமாகிய உலகம் என்னும் பொருளும் இருக்கின்றன.

எங்கே நாம ரூபம்மட்டுமே தோன்றுகிறதன்றிவேறென்றும் புலப்படவில்லையேயெனின், ஒரு காலத்தில் ஒன்றே தோன்றும். மற்றது தோன்ருதிருப்பது அதன் குற்றமல்ல. அதைப்பாராத குற்றம் ஆன்மாவுடையதே. சூரியன் பிரகாசித்துக் கொண்டேதான் இருக்கிறது. நீ கண்களைத் திறந்து பாராமல் மூடிக்கொண்டு பகலவன் புலப்படவில்லையே என்ருல் அது யார் குற்றம்?

அதைப்போல், நமக்கு நாமரூபத்திலே நாட்டமிருக்கிறவரையில் சச்சிதானந்த சொரூபம் தோன்ருது. இந்த நாட்டம் விட்டால் அதுதோன்றும். அது தோன்றும் போது அது தவிர மற்றயாவும் பொய்யெனத் தோன்றும். அதாவது உலகம் பொய்த்தோற்றமென்பது அனுபவமாய் விளங்கும்.

மேற்கூறியவாறு மனதிற்கு நாமரூபத்திலேயே நாட்டமாதலாலும், அது நாடுவதற்கு இச்சையே காரணமாதலாலும் மனமே பிறவிக்குக் காரணம் என்று கூறுவதும், இச்சையே பிறவிக்குக் காரணம் என்று கூறுவதும் ஒன்றே.

**''அவாவென்ப தெல்லாவுயிர்க்கு எஞ்ஞான்றுந்**
**தவாஅ அப்பிறப் பீனும் வித்து''**

என்று நாயனுரும்,

**''நிராசையின்றேல் தெய்வமுண்டோ''**

எனத்தாயுமானவ சுவாமிகளும் அருளியவற்ருல் உணர்க.

**(தொடரும்)**




நூல் நிலையம்

# நாவலர் நாடகம்

**விலை:- 2ரூபா தபாற் செலவு 50சதம்**
**வெளியீடு:- ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.**
**நூலாசிரியர்:- மகரிஷி சுத்தானந்த பாரதியார் அவர்கள்**

நாவலர் பெருமான் என்ற பெயருடன் நாவலருடைய சரித்திரத்தைத் தகுந்த ஆதாரங்களுடன் தமிழுலகுக்கு அளித்த சுவாமிகள் பாமர மக்களும் நாவலரை நாடகமூலம் அறிய வேண்டுமென்ற கருத்துடன் எழுதியுள்ளார்கள். பாடசாலைமாணவர்களும் நாடகஅபிமானிகளும் நடித்து நாவலர் பெருமானுடைய தொண்டை உலகறியச் செய்ய இது ஓர் வாய்ப்பாகும்.

# கந்தபுராணம் சூரபன்மன் வதைப்படலம் (பொழிப்புரை)

**வெளியிட்டவர்:- தா. சிவகுருநாதன் - வட்டுக்கோட்டை**
**விலை:- சாதாரண பதிப்பு:- 3ரூபா**
**விசேட பதிப்பு:- 5ரூபா**

கந்தபுராணம் படிப்பவர்களுக்கு இதுஓர் வழிகாட்டியாகும். முருகபக்தர்கள் முருகன் புகழை அறிந்து கொள்வதற்குஒருவழிநூலாகும். சித்தாந்தப்பொருள் நிறைந்த இப்புராணத்தைப் படிப்பதால் மக்கள் இவ்வுலகஇன்பத்தோடு மறுஉலகத்திலும் வீடுபேறு பெற்று வாழ்வர்.

Registered at the G. P. O. as a Newspaper M. L. 59/300

## சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

இறைவன் திருவருளால் ஆத்மஜோதிக்கு 17 ஆண்டுகள் பூர்த்தியாகி 18வது ஆண்டு ஆரம்பமாகி உள்ளது. பல சந்தா நேயர்களுடைய ஆதரவினாலேயே ஜோதி மாதந்தோறும் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. வழக்கம்போல அன்பர்கள் அனைவரும் புத்தாண்டுச் சந்தாவை அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். சந்தா நேயர்கள் தமது சந்தா இலக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்தியாவிலுள்ள சந்தா நேயர்கள் வழக்கம் போல்

**R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ்,**

அரிசிப்பாளையம், சேலம் — 9.

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைப்பதோடு

இவ்விடமும் அறியத்தருவீர்களாக.

# ஆத்மஜோதி நிலையம்

## நாவலப்பிட்டி, (சிலோன்).

அச்சிடுவோர்:- ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்
அச்சிடுவிப்போர்:- ஆத்மஜோதி நிலையத்தினர்
வெளியிட்டதேதி:- 16-11-1965.